# அகராதிகளில் இலங்கைத் தமிழ்ச்சொற்களின் நிலைபேறாக்கமும் ஊடாட்டமும்

**சுபதினி ரமேஸ்**
subathini128@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அகராதிகளின் முக்கியத்துவம் பற்றி இன்று பேசப்படுவதற்குக் காரணம் அவற்றின் சொல் வளங்களும் பொருள் பயன்பாடுகளுமேயாகும். அவ்வகையில் தமிழ் என்பதனைப் பிராந்திய அடிப்படையில் நோக்கும் போது இந்தியத் தமிழ் இலங்கைத் தமிழ் வேறுபாடே முதலில் உணரப்படுகிறது. அகராதிகளின் காலம் முதல் இன்று வரை இலங்கைச் சொற்களின் பதிவுகள் தொடர்ந்து பெருகிக் கொண்டே வருகின்றன. எனவே அவற்றின் நிலைபேறாக்கம் எந்தளவுக்கு அகராதிகளில் காணப்படுகிறதோ, அதேயளவுக்கு காலம் மாற மாற ஊடாட்டம் என்ற நிலையை அடைந்து வருவதனையும், இவ்வாய்வின் மூலம் நிலை நாட்டுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். சென்னைப் பல்கலைக்கழக அகராதிகளின் ஏழு தொகுதிகளும், கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதிகளும் பல ஆயிரக்கணக்காண சொற்களைத் தம்மிடையே கொண்டிருந்தாலும், அவற்றின் நிலைபேற்றை பல சூழலியல் அம்சங்கள், புறக்காரணிகள், வரலாற்று அம்சங்கள், பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, வட்டார வழக்கு என பல்வேறு காரணிகள் நிர்ணயிக்கின்றன. இதே போன்றே அகராதிகள் யாவற்றிலும் காணப்படும். இலங்கைச் சொற்கள் கூட அதன் ஊடாட்ட நிலையை பல காரணங்களால் முன்வைக்கின்றன. இவ்வாய்விற்கான முதன்மை ஆதாரங்களாக சென்னைப் பல்கலைக்கழக அகராதி (Tamil lexicon) க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, வின்ஸ்லோ அகராதி உள்ளிட்ட வேறு சில அகராதிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற் கூறிய தமிழ்ப் பேரகராதியின் எல்லாத் தொகுதிகளிலும் அவற்றுக்கான துணைத் தொகுதியிலும் இலங்கை வழக்கு எனக் குறிப்பிட்ட சொற்களையும், சொற்பொருள்களையும் ஆராயுமிடத்து அவற்றை மீண்டும் ஒருமுறை மீள்பார்வை செய்யவேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஏனெனில் இங்கு தரப்பட்டுள்ள சொற்களில் பெரும்பாலானவை வழக்கில் உள்ளவை. அதுமட்டுமின்றி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு இரண்டுக்கும் பொதுவான சொற்களையும் இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. இப்பொதுச் சொற்கள் பெரும்பாலும் இலங்கையில் அனைவரது வழக்கிலும் உள்ளன எனலாம். ஆயினும் வாழ்க்கையிலும், சமுதாயத்திலும் ஏற்பட்டு வரும் பெரும் மாற்றங்கள் காரணமாக இச்சொற்களுக்கு பல விரைவில் வழக்கொழிந்துவிடும் வாய்ப்பும் உண்டு. இளந்தலைமுறையினின் பேச்சு வழக்கில் எத்தனையோ சொற்கள் இடம்பெறுவது இல்லை. அவர்கள் இச்சொற்களையோ சொற்பொருள்களையோ அறியார். அவ்வகையில் இவ்விரண்டு கருத்தாக்கங்களும் அதாவது நிலைபேறாக்கம், ஊடாட்டம் என்பன இந்த ஆய்வின் மூலம் எவ்வாறு தெளிவுபடுத்தப் படுகின்றன என்று நோக்கலாம்.

**திறவுச்சொற்கள்:** அகராதி, ஊடாட்டம், நிலை பேறாக்கம், சென்னைப் பல்கலைக் கழக அகராதி, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, பேச்சு வழக்கு

## அகராதிகளின் வளர்ச்சியும் முக்கியத்துவமும்

அகராதிகள் ஒரு சொல்லின் பொருளையும் அதன் வடிவத்தையும் மட்டும் அறிவதற்கு உரியவை அல்ல. அவை ஒரு மொழியின் வளத்தையும் வரலாற்றையும் காட்டுபவை. சொல்லாராய்ச்சிக்கான ஒரு தரவு மையமாகவும் அமைகின்றன. அவ்வகையில் இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து வெளிவந்த அகராதிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வோமானால் இலங்கைத் தமிழ்ச் சொற்களின் நிலைபேற்றையும் அதன் ஊடாட்டத்தையும் கருத்திற் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் அச்சொற்கள், சொற் பொருள்கள் காலப்போக்கில் மாற்றம் அடைந்துள்ளனவா, எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் வழங்கப்படுகின்றனவா, அல்லது திரிபடைந்து மாறிவிட்டனவா, மறைந்து விட்டனவா, பொருள் மாற்றம் அடைந்துவிட்டனவா எனப் பலவகையான விளக்கங்களை எம்முன் ஏற்படுத்துகின்றன. இலங்கையில் தமிழ்மொழியின் இயல்பையும் பண்பாட்டையும் பேணும் வகையில் 19ம் நூற்றாண்டில் தமிழ் அகராதித் துறைக்கான ஈழத்தறிஞர்களின் பங்களிப்புக்கள் வெளிப்படத் தொடங்கின. அவ்வகையில் 1960ம் ஆண்டிற்குப் பின்னர் அக்காலத்தில் வாழ்ந்த சைமன் காசிச் செட்டி அவர்களின் அகராதி முயற்சிகளினூடாக பலவகையான அகராதிகள் சிறப்பாக வைத்திய அகராதி, புலவர் அகராதி, தமிழ்விபர அகராதி, கலைச்சொல் அகராதி, இருமொழியகராதி, திசைச் சொல் அகராதி எனப் பல பிரிவுகளில் செயற்பட்டு அகராதிகளை உருவாக்கியுள்ளார்கள். பல மேலைத்தேய அறிஞர்கள் Joseph Beschi (வீரமா முனிவர்) போன்றோர் சதுரகராதியை தமிழ் நிகண்டுகளுக்கு மாற்றீடாக அறிமுகப்படுத்தினார்கள். இவர் போன்றே தமிழ் அகராதித் துறையின் முன்னோடியானவையும், காத்திரமானவையுமான பல முயற்சிகளை ஈழத்தவர் பலர் செய்து வந்ததற்குச் சான்றாக 1876 இல் உருவான சிந்தாமணி நிகண்டுகளும் (35 இற்கு மேற்பட்டவை) 1842ல் தொகுக்கப்பட்ட யாழ்ப்பாண அகராதி 58500 சொற்களைக் கொண்டிருந்தமையும் காரணமாகின்றன. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மத பாரம்பரியத்தின் விரிவாக்கத்தினால் ஆங்கிலத்திற்கு தமிழ்ப்பத விளக்கங்களை தேடிக்கண்டுபிடித்து அவற்றினை அகராதியாக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

18ம், 19ம் நூற்றாண்டுகளில் பன்னாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் தேவைகளுக்கான பிரெஞ்சு, டச்சு, ஆங்கில மொழி மூலமான அகராதிகளையும் உருவாக்கியுள்ளார்கள். பின்னர் Gragery James அவர்களின் அகராதி பற்றிய பல பங்களிப்புக்களையும் நோக்குங்கால் ஈழத் தழிழறிஞர்களின் அகராதி முயற்சிகளுக்கு கால்கோள் அமைத்தவர்களே இவர்கள் தான் எனப் பேசக்கூடியதாக இருக்கிறது. 19ம், 20ம் நூற்றாண்டுகளில் ஈழத்தழிழ் அறிஞர்களின் புலப்பெயர்வு, இடர்பாடுகள், போர்ச்சூழல் யாவும் எம்மை வேறொரு வழிக்கு இட்டுச் சென்றிருக்கிறது. அன்று எம் மூதாதையர் எமது மரபுரிமைகளையும், பிரதேச மொழி வழக்குகளையும், நாட்டார் மொழி வழக்குகளையும், பண்பாட்டையும், சமயத்தையும், கலைகலாசாரங்களையும் பேணிப்பாதுகாக்கும் வண்ணம் மீண்டும் எமது அக்கறையை இச் சமூகத்திற்குள் திருப்பி விட்டிருக்கின்றார்கள். தற்போது இப் பெரிய கடமையை நாம் தொடர வேண்டிய கட்டத்திற்குள் வந்து நிற்கிறோம்.

இலங்கைத் தமிழ் அகராதிகளுக்கு ஈடாக இந்தியாவிலும் அகராதிகளின் வளர்ச்சி

நிலையை நாம் முன்னெடுக்க வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும். மதுரைச் தமிழ்ச்சங்க அகராதி மூன்று தொகுதி களைக் கொண்டது. 1910ல் முதல் தொகுதியும் அதற்குப்பின் ஏனையவையும் வெளிவந்தன. இந்திய மொழிகளில் தோன்றிய தமிழ்ப் பேரகராதி இருபதாம் நூற்றாண்டுகளில் Tamil Lexion என்ற பெயரில் முதன் முதல் வெளிவந்தது. இவ் ஏழு தொகுதிகளும் பிரெட்டிக் நிக்கல்சன் (Frederik Nicholsan), வின்சுலோ, மதுரைத் தமிழ்ச் சங்க அகராதி ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டன எனலாம். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை முதற்கொண்டு பதிப்பாசிரியரான சிதம்பரநாதன் செட்டியார் அவர்களுடன் சேர்ந்து, பல்பேரின் துணையுடன் இவ்வ கராதிகள் உருவாக்கப்பட்டன.

இவ்ஆய்விற்கான முதன்மை ஆதாரங் களாக சென்னைப் பல்கலைக்கழக அகராதி (Tamil Lexicon), க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, வின்ஸ்லோ அகராதி உள்ளிட்ட வேறு சில அகராதிகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. சென்ற நூற்றாண்டின் முப்பதுகளில் சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட அகராதி மட்டும் இலங்கைத் தமிழ் வழக்குச் சொற் களையும், சொற்பொருள்களையும் சுட்டிக் காட்டியுள்ளன. தமிழ் லெக்ஸிகன் எனப் படும் இவ் அகராதி ஆறு தொகுதிகளையும் ஒரு குறைநிரப்புத் தொகுதியையும் உள்ளடக்கி ஏழு தொகுதிகளைக் கொண் டுள்ளது. அது எந்த வகையிலும் வரையறுக் கப்படாது தமிழ் மொழிக்குப் பொதுவானது. அதனை இன்றும் ஆய்வாளர்கள் தராதர அகராதியாகவே (standard dictionary) கொள்கின்றனர்.

### தமிழ் லெக்சிகனும் இலங்கைத் தமிழ்ச் சொற்களும்

சென்னைப் பல்கலைக்கழக அகராதி முயற்சியில் உருவான தமிழ் லெக்சிக்கன் இந்தியச் சொற்களையும், இலங்கைச் சொற்களையும் உள்ளடக்கியுள்ளமையை போற்ற முற்படும் அதேவேளையில் அவற் றின் அமைப்பு, உள்ளடக்கம், சொற்களின் தேர்வு, பொருள் மாற்றம் போன்றனவும் அந்தளவுக்குக் கவனத்தில் கொள்ளப்பட் டுள்ளன என்பதையும் அகராதி ஆய்வுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. முதலாவ தாக நாம் தமிழ்ப் பேரகராதிகளை எடுத்துக் கொள்வோமேயானால், அவற்றின் ஆறு தொகுதிகளும், ஏழாவதாக குறைநிரப்புத் தொகுதியையும் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இங்கு காணப்படுகிறது. தேவை கருதி சிலவற்றை இங்கு பட்டியற்படுத் தியுள்ளேன்.

### தொகுதி ரீதியான பகுப்பு முறை

#### தொகுதி ஒன்று

லெக்சிகனின் ஒவ்வொரு தொகுதியையும் நோக்குமிடத்து அவற்றில் காணப்படும் இலங்கைத் தமிழ்ச் சொற்கள் சிலவற்றைத் தொகுதிவாரியாகத் தொகுத்துத் தரலாம் என உள்ளேன். எனினும் முழுச் சொற் களையோ, சொற்பொருள்களையோ இங்கு தருவதாயின் அவை நீண்ட ஆய்வாக அமைந்துவிடும். எனவே தேவை கருதிச் சிலவற்றை இங்கு அட்டவணைப்படுத் தலாமெனத் தோன்றுகிறது.

இத்தொகுதி ஒன்று தொடக்கம் அறுநூற்று முப்பத்திரண்டு பக்கங்களைக் கொண்டுள்ளது. இங்கு அ தொடக்கம் ஔ வரையிலான சொற்களும் குறை நிரப்புத் தொகுதியும் காணப்படுகின்றது. இங்கு காணப்படும் அங்கை என்ற இலங்கைச்

சொல், சொற் பொருள் ரீதியாக யாழ்ப்பாண வழக்கில் ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்படுகிறது. இது பேச்சு வழக்கில் அங்கை எனவும் எழுத்து வழக்கில் அங்கே எனவும் பொருள்படுகிறது. இது போன்று பல சொற்களை இங்கு அட்டவணைப்படுத்தி விளக்க முடியும். சில சொற்களின் பொருள்கள் வழக்கொழிந்து போன நிலையையும், சில அதே வடிவத்தில் வழங்குகின்ற நிலையையும் காண முடிகிறது. உதாரணத்திற்குச் சில:

**அப்பி –**
தலைவி, தமக்கை (அகராதிப் பொருள்).
அளவுக்கு அதிகமாகப் பூசுதல் - (இலங்கை வழக்கு)
குழந்தை பவுடரை அப்பிப் பூசியுள்ளது.

**அரிவரி –**
நெடுங்கணக்கு (அகராதிப் பொருள்).
ஆரம்ப வகுப்பு - (இலங்கை வழக்கு)

**ஈஞ்சு –**
பேரீஞ்சு, காட்டீஞ்சு, சிற்றீஞ்சு. (அகராதிப் பொருள்)
உருவத்தில் பெரிதாகுதல் - சட்டை நன்றாக ஈஞ்சு போய்விட்டது.
உக்கிப்போவது - செருப்பு ஈஞ்சு போய் விட்டது - (இலங்கை வழக்கு.)

## தொகுதி இரண்டு

இத் தொகுதி அறுநூற்றி முப்பத்து மூன்று தொடக்கம் ஆயிரத்து இருநூற்றி எட்டு வரையிலான (633 - 1208) பக்கங்களையும், க தொடக்கம் கௌ வரையிலான எழுத்துக்களையும், துணைப்பகுதியையும் கொண்டுள்ளது. இங்கு காணப்படும் இலங்கை வழக்கு, யாழ்ப்பாண வழக்கு எனச் சொல்லப்படும் சொற்களும், சொற்பொருள்களும் உருவத்தில் மாற்றமடைந்தும், வழக்கொழிந்தும் வேறு பொருளைக் குறிப்பனவாகவும் அமைவதைக் காணலாம். பின்வருவன உதாரணங்களில் சில,

**கட்டாக்காலி –**
பட்டிமாடு (அகராதிப் பொருள்).
தன்னிச்சையாகத் திரியும் மாடு. நாய் போன்ற விலங்குகளையும்,
கீழ்ப்படியாது கட்டுப்பாடற்றுத் திரியும் மனிதரையும் குறிக்கும் - (இலங்கை வழக்கு.)

**கடவான் -**
கழிவு நீர் செல்வதற்கு வெட்டப்பட்ட நீர் மடை (அகராதிப் பொருள்).
இயலாதவன், சொன்ன சொல் தவறாதவன் - இப் பொருளானது ஆரம்பத்தில் வழக்கிலிருந்தாலும் பின்னர் வழக்கற்றுப் போய்விட்டது.
கலவரம் - மனக்கலக்கம் (அகராதிப் பொருள்).

**இனக்கலவரம் –**
இச்சொல் இலங்கை வழக்கில் கூடுதலாக இனங்களுக்கிடையே ஏற்படும் கலவரத்தையே குறிப்பிடுகிறது.

## தொகுதி மூன்று

இத் தொகுதி ஆயிரத்தி இருநூற்று ஒன்பதிலிருந்து ஆயிரத்தித் தொளாயிரத்து முப்பத்து நான்கு வரையிலான (1209 - 1934) பக்கங்களையும், ச விலிருந்து தி வரையிலான சொற்களையும், துணைப் பகுதியையும் கொண்டமைந்துள்ளது. இவையும் வழக்கொழிந்தும், பொருள் மாறியும், சொல் வடிவங்கள் திரிந்தும் பலவகைப்பட்ட மாறுதல்களுக்கு உள்ளாகியுள்ளமையை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டலாம்.

**சடைதல் –** சோர்வடைதல். உள்ளடக்குதல். நறுக்கிப் போதல் போன்றன (அகராதிப் பொருள்).

ஒரு விடயத்தைப் பிறர் அறியாத வகையில் மூடி மறைத்தல் என்பதே (யாழ்ப்பாண வழக்கு)

**செட்டு –** வியாபாரம், சிக்கனம், உலோபம். (அகராதிப் பொருள்).

தற்பெருமை, கர்வம். உதாரணம் - கூடப் படிச்சதனால் அவனுக்குச் செட்டு வந்திட்டுது.

இங்கு பழைய பொருள் வழக்கொழிந்து புதிய பொருள் உருவாகியுள்ளது. (யாழ்ப் பாணப் பொருள்)

**திணிசு –** பொருளின் தரம் (அகராதிப் பொருள்).

மனிதனின் நடத்தையை விபரிப்பது -அவன் ஒரு திணிசு. திணிசானவன். (யாழ்ப்பாணப் பொருள்)

**தொகுதி நான்கு**

இத் தொகுதி ஆயிரத்தித் தொளாயிரத்து முப்பத்தைந்து தொடக்கம் இரண்டாயிரத்து ஐந்நூற்றி எழுபத்தாறு வரையிலான (1935 - 2576) பக்கங்களையும் தீ யிலிருந்து ப வரையிலான சொற்களையும், துணைப் பகுதியையும் கொண்டமைந்துள்ளது. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் மனிதனின் பேச்சு மொழியிலும் மாற்றங்களை உருவாக்குகின்றன. அவ்வகையில் சொற்கள் பல வழக்கொழிந்தும், புதிய சொற்கள் தோன்றியும், பொருளில் மாற்ற மடைந்தும் செல்லலாம். அவ்வகையில் பின்வரும் உதாரணங்களில் சில இதனை எடுத்துக்காட்டுகின்றன.

**துடக்கு –** தன்னகப்படுத்துவது. சூதகம் (அகராதிப் பொருள்).

மரணவீட்டிற்கும் குழந்தை பிறந்த வீட்டிற் கும் செல்வதால் ஏற்படும் தீட்டு.

இப் பொருள் இலங்கைத்தழிழ்ச் சமுதாயத் தினருக்கே உரிய பொருளாகும்.

**நல்ல வாய் –** இனிய மொழிகள் (அகராதிப் பொருள்). ஒருவரைத் திட்டுதல்.

அவனுக்கு நல்லவாய் என்று ஏசினான். (யாழ்ப்பாண வழக்கு)

**நுகர்தல் –** அவித்தல், ஆற்றுதல் (அகராதிப் பொருள்).

விளக்கை அணைத்தல் (யாழ்ப்பாண வழக்கு).

**தொகுதி ஐந்து**

இங்கு இரண்டாயிரத்து ஐந்நூற்றி எழுபத் தேழு முதல் மூவாயிரத்தி இருநூற்றுப் பதினாறு வரையிலான (2577 - 3216) பக்கங்களையும் பா விலிருந்து மீ வரை யிலான சொற்களையும், துணைத்தொகு திகளையும் காணலாம். இங்கு காணப்படும் யாழ்ப்பாண வழக்கு, இலங்கை வழக்குச் சொற்களும், சொற்பொருள்களும் ஏனைய தொகுதிகள் போன்றே பொருள் திரிந்தும், உருமாறியும், புதிய பொருள் உருவாகியும் எனப் பல மாற்றங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. இதற்கான உதாரணங் களிற் சில:

**பாடுபரப்பு –** கவலை (அகராதிப்பொருள்).

ஓய்வு ஒழிச்சல் இன்றி உழைத்தல், அந்தரப் படுதல் (யாழ்ப்பாண வழக்கு).

**பிராக்கு –** சென்றது (அகராதிப்பொருள்). ஏமளாந்திக் கொண்டிருத்தல், பொழுது போக்கு, பராக்குப் பார்த்தல்.

**புளிப்பு தட்டுதல் –** புளிப்புடையதாதல், உருசி யறுதல் (அகராதிப் பொருள்). வெறுப்பு அல்லது அலுப்பு ஏற்படும் தன்மை (யாழ்ப் பாண வழக்கு).

**தொகுதி ஆறு**

இதில் மூவாயிரத்து இருநூற்றிப் பதினேழு முதல் மூவாயிரத்து எண்ணூற்றி ஐம்பத் தொன்பது வரையிலான (3217-3859) பக்கங்களையும், மு முதல் ன வரையிலான சொற்களும், துணைத்தொகுதியும் இங்கு

ஆராயப்பட்டுள்ளன. அவை பல மாற்றங்களை உள்வாங்கியுள்ளதுடன் புதிய மாற்றங்களிற்குட்பட்டே மொழிகளின் வழக்குகளில் பயின்று வருகின்றன. இவற்றுள் சிலவற்றை இங்கு உதாரணமாகப் பார்க்கலாம்.

**முசுப்பாத்தி** – இளைப்பாற்றுகை வேலை (அகராதிப்பொருள்).
கேலி செய்தல் (இலங்கை வழக்கு)
**மிலாந்தி** – வெறித்துப்பார்ப்போன் (அகராதிப்பொருள்).
பராக்குப்பார்ப்போன் (இலங்கை வழக்கு).
**வம்பு** – சோரத்திற் பெற்ற குழந்தை (அகராதிப்பொருள்).
பயனில்லாத விடயங்கள், பேசக்கூடாத விடயங்கள்.

**சொற்களின் தகுதிகாண் நிலை**

மேற்கூறிய தொகுதிகள் யாவற்றையும் ஆராய்ந்த பின் இச் சொற்களின் இன்றைய நிலையைப் பார்த்த போது அவற்றைப் பல நிலைகளில் வகுத்துப் பார்க்கலாம். முதலாவதாக முற்றாக வழக்கிழந்த நிலையில் காணப்படுபவை. இவ்வழக்கிழந்த சொற்கள் எவ்வகையான சொற்கள் எனக் கூற முடியாதுள்ளது.

இரண்டாவது நிலை அருகிய வழக்காகும். இவ் அருகிய வழக்குச் சொற்களின் வருங்கால நிலை பற்றி அதாவது மலர்ந்து வாழுமா? அல்லது இறந்துபடுமா? என முற்றாகக் கூற முடியாது. ஏனெனில் மொழி காலத்துக்குக் காலம் மாற்றமடையலாம். அதாவது இன்று வழங்கப்படும் சொற்கள் நாளை இறந்துபடலாம். அல்லது இன்று இல்லாத சொற்கள் நாளை வந்து சேரலாம். அத்தோடு விஞ்ஞானமும் கல்வியும் நாகரிகமும், தொழில்நுட்பமும் வளர்ந்து கொண்டு செல்லும் இக்காலத்தில் புதுப் புதுச் சொற்களைக் காணும் போது பழைய வழக்கைக் கைவிடலாம். பழமையான சில சொற்களை இன்று அதிகமாக முதியோர்கள்தான் பாவிக்கிறார்கள். அவர்கள் பாவிக்கும் சில சொற்களை இக்காலத்து இளைஞர்கள் பாவிப்பதில்லை. ஆதலால் இவ்வருகிய வழக்குச் சொற்கள் எதிர் காலத்தில் இறந்துபடும் எனக் கூற இடமுண்டு. ஆனால் திட்டவட்டமாக இறந்து படும் எனக் கூற முடியாது.

மூன்றாவது நிலை பெருவழக்கு நிலையாகும். கிட்டத்தட்ட 37 மூலச் சொற்கள் பெருவழக்கான சொற்களாகக் காண முடிகிறது.

நான்காவது நிலை வேறு பொருளில் வழங்கப்பட்டு வருகின்றன. எடுத்துக் காட்டாக அடக்கம் - வாணவகை (யா இவ). அடக்கம் என்ற இச்சொல் யாழ்ப்பாணத்தில் இக்கால வழக்கில் உண்டு. ஆனால் வாணவகை என்ற பொருளில் வழங்கப்படுவதில்லை. நாம் இச் சொல்லை நோக்கும் போது அடக்கம் என்ற இச்சொல்தான் இன்று வழங்கப்படும். அடக்கமான பெண். சவம் அடக்கம் செய்தல் என்ற கருத்தில் மாறி இருக்கிறது என்று கூறமுடியாது. ஏனெனில் இச் சொல்லும் இன்று வழங்கப்படும் கருத்தும் இவ் அகராதிக்குச் சொற்கள் கொடுத்த காலத்திலும் இருந்திருக்கலாம். இக்கருத்து தமிழ் மொழியின் பொதுக்கருத்தாக இருந்திருக்கலாம். ஆதலால் யாழ்ப் பாணத்தில் மட்டும் சிறப்பாக அடக்கம் என்ற சொல்லுக்கு வாணவகை என்ற கருத்திலும் பாவிக்கப்பட்டு வந்தமையினால் இச் சொல்லை யாழ்ப்பாண வழக்கு என்றே கொடுத்திருக்கலாம் போல் தெரிகிறது.

தமிழ் அகராதியில் வெவ்வேறு விதமான இரண்டு சொற்கள் ஒரே பொருளில் வழங்கப்பட்டு வந்த முறை கொடுக்கப்

பட்டுள்ளது. ஆனால் இன்று சில முற்றாக வழக்கிழந்தும் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டு: செருப்புத்தின்னி - நாய் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது.

அகராதியில் இயற்று என்றால் பாத்திரம் என்றும் இயத்து என்றால் இயற்றுதல் என்றும் பொருள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று இவ்விரு சொற்களும் மாறிவழங்கப்படுகின்றன. அதாவது இயத்து என்பது பாத்திரத்தைக் குறிப்பதற்கும், இயற்று என்பது இயற்றுதலைக் குறிப்பதற்குமாக வழங்கப்பட்டு வருவதைக் காணலாம்.

**ஒலி மாற்றங்களால் ஏற்பட்ட பொருள் மாற்றம்**

மேலும் சொற்கள் மாற்றமடைவதற்கு அவற்றில் உள்ள ஒலிமாற்றங்களும் காரணமாகின்றன. இவ்வொலி மாற்றமானது சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூன்று நிலைகளிலும் நிகழ்ந்திருக்கின்றது. முதல் நிலையில் ஏற்படும் மாற்றம் காரணமாக உருவாகிய சொற்களில் சில:

| | |
|---|---|
| கிஞ்சா, கஞ்சா | கி, க |
| நழுங்குதல், மழுங்குதல் | ந, ம |
| மடலி, வடலி | ம, வ |

அடுத்த சொல்லின் இடைநிலையில் உள்ள ஒலிகளின் மாற்றம் காரணமாக உருவாகிய சொற்களில் சில:

| | |
|---|---|
| இயத்து, இயற்று | த், ற் |
| சாத்தகப்பை, சாந்தகப்பை | த், ந் |
| மாச்சி, மாஞ்சி | ச், ஞ் |

சொல்லின் கடைநிலையில் உள்ள ஒலிகளின் மாற்றம் காரணமாக உருவாகிய சொற்களில் சில:

| | |
|---|---|
| சோற்றி, சோத்தி | ற், த் |

எனவே அகராதியில் கொடுக்கப்பட்ட இச்சொற்கள்தான் ஒலிமாற்றம் பெற்று இவ்வாறு காணப்படுகின்றன. ஏனெனில் அங்கு கொடுக்கப்பட்ட பொருளும் சொல்லும் ஒன்றுதான். சொல்லில் ஒரு ஒலி மட்டும்தான் மாற்றம் பெற்றுக் காணப் படுகிறது. இதைவிட ஒரு ஒலி கூடிக் காணப்படும் ஒரு சொல்லும் இன்று காணப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, பொத்தி பிடித்தல் என்ற சொல் தமிழ் அகராதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று இச்சொல் “ப்” என்னும் ஒலியைச் சேர்த்துப் பொத்திப்பிடித்தல் என வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பெயர்களில் மாற்றம் ஏற்படுகிறது.

தமிழ் அகராதியில் உள்ள யாழ்ப்பாணத்துச் சொற்கள் இலங்கை முழுவதும் ஏற்படுத்தி உள்ள பாதிப்பைப் பொதுவாக நோக்கினால் இலங்கை முழுவதிலும் 59.9 சதவீதம் சொற்கள் வழக்கில் இருப்பதைக் காண முடிகிறது. 40.1 சதவீதம் சொற்கள் வழக்கிழந்து காணப்படுகின்றன. இன்று வழங்கப்பட்டு வரும் சொற்களில் அதிகமானவை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது இலங்கையின் ஏனைய தமிழ்க் கிளைமொழிகளிலும் பரந்து காணப்படுகின்றன. பொருள்மாற்றம், ஒலிமாற்றத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட ஒரே விதமான சொற்கள் ஒரே விதமான மாற்றத்தைப் பெற்றுக் காணப்படுகின்றன.

மேற்கூறிய பேரகராதியின் எல்லாத் தொகுதிகளிலும் அவற்றுக்கான துணைத்தொகுதியிலும் இலங்கை வழக்கு எனக் குறிப்பிட்ட சொற்களையும், சொற்பொருள்களையும் ஆராயுமிடத்து அவற்றை மீண்டும் ஒரு முறை மீள்பார்வை செய்யவேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஏனெனில் இங்கு தரப்பட்டுள்ள சொற்களில் பெரும்பாலானவை வழக்கில் உள்ளவை. அதுமட்டுமின்றி

பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு இரண்டுக்கும் பொதுவான சொற்களையும் இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. இப்பொதுச் சொற்கள் பெரும்பாலும் இலங்கையில் அனைவரது வழக்கிலும் உள்ளன எனலாம். ஆயினும் வாழ்க் கையிலும், சமுதாயத்திலும் ஏற்பட்டு வரும் பெரும் மாற்றங்கள் காரணமாக இச்சொற்களுக்கு பல விரைவில் வழக் கொழிந்துவிடும் வாய்ப்பும் உண்டு. இளந் தலைமுறையின் பேச்சு வழக்கில் எத்தனையோ சொற்கள் இடம்பெறுவது இல்லை. அவர்கள் இச்சொற்களையோ சொற்பொருள்களையோ அறியார். மேலும் தொகைச் சொற்கள் சில இப் பேரகராதியில் இடம்பெற்றுள்ளன. இச்சொற்களின் முன்னொட்டுக்கள் தனித்துப் பெயர் தரக் கூடியவை. சில சொற்களுக்குத் தரப் பெற்றுள்ள சொற்பொருள்கள் ஒன்றுக் கொன்று முரண்படுபவையாகவும் காணப் படுகின்றன. இவ்வாறு இருத்தல் இயல்பா என்ற ஐயம் எம்மிடம் ஏற்படுகின்றது. எனவே மேற்கூறிய ஆய்வு தொடர்ந்து நிகழ்ச்சிப்படுத்தப்படு மேயானால் இன்னும் பல தொகையான சொற்களையும் சொற் பொருள்களையும் எதிர்காலத்தில் திரட்ட முடியும்.

தமிழ் அகராதியில் காணப்பட்ட யாழ்ப் பாணத்து வழக்குச் சொற்கள் 2971 ஆகை யால் இச்சொற்களின் ஆக்கம் பற்றியும் பொருள் அமைப்புப் பற்றியும் தனியே ஒரு ஆராய்ச்சியை விரிவாகச் செய்ய முடியும். அதனை இங்கு காலம் கருதி மேற் கொள்ளவில்லை. அச்சொற்களை ஏனைய திராவிட மொழிச்சொற்களோடு ஒப்பு நோக்கி ஆராய்வதும் பயனுடையது. இன்று வழக்கற்றுக் காணப்படும் சொற்களை அகராதியில் இருந்து நீக்குவதா இல்லையா என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். இவ்வாறு வழக்கில் உள்ள, வழக்கிழந்த சொற்களை நிலைபேறாக்கமா ஊடாட்டமா எனப்பார்க்க வேண்டிய தேவை ஏற்படு கிறது. ஏனெனில் வழக்கிழந்த சொற்களை அகராதியிலிருந்து நீக்கினால் ஒரு காலத்தில் யாழ்ப்பாண வழக்கென்று இருந்த சொற்கள் காலகதியில் மறைந்து போய்விடும். ஆதலால் அகராதி திருத்தி அமைக்கப்படும் காலத்தில் வழக்கு இழந்த சொற்களை நீக்கி விடாமல் இன்று இச் சொற்கள் வழக்கில் இல்லை என்பதைக் காட்டுவதற்கு ஒரு குறியீட்டைக் காட்டி இச் சொற்களைத் திரும்பவும் அகராதியில் குறிப்பது பயனுடையது. இன்று வழக்கில் உள்ள சொற்களை யாழ்ப்பாண வழக்கென்று கொடுக்காமல் பொதுவான இலங்கைவழக்கு என்று கொடுப்பது நன்று.

## கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதியும் இலங்கைத் தமிழ்ச் சொற்களும்

கிரியாவின் தற்காலத்து தமிழ் அகராதியின் முதற் பதிப்பு 1992ம் ஆண்டிலும், அடுத்த திருந்திய பதிப்பு 2008ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. இது தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வேற்று மொழி பேசும் மாணவர்கள் போன்ற அனைவராலும் பாராட்டப்படும் ஓர் அகராதி யாக விளங்குகிறது. ஆயினும் எந்தவொரு அகராதியும் முழு நிறைவானதல்ல. வாழும் மொழிகள் எல்லாவற்றிலும் சொற்கள் மறைந்து கொண்டும் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டும் இருக்கின்றன. அதனால் தேவைகளுக்கான அகராதிகள் பற்றியே பலரும் அக்கறை கொள்கின்றனர். அவ்வகையில் கிரியாவின் அகராதி தற்காலத் தமிழ் என்ற வரையறைக்குள் உருவான அகராதி எனலாம். எழுத்துத் தமிழ், பேச்சுத்தமிழ் இரண்டும் இவ்வரை யறைக்குள் நிற்கின்றன. இவ்வகராதி உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய

இ.அண்ணாமலை, பா.ரா.சுப்பிரமணியன் இருவரும் அகராதியின் சொற்தேர்வு பற்றி கிரியாவின் முதற்பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் இதனைத் தெளிவாக வரையறுத்துள்ளனர்.

முதற்பதிப்பில் 15875 தலைமைச் சொற்கள் இடம்பெற்றிருந்தன. இரண்டாம் பதிப்பில் 21000 ஆக அதிகரித்துள்ளது. அதில் 436 இலங்கைத் தமிழ்ச் சொற்களும், இரண்டாம் பதிப்பில் அவற்றின் எண்ணிக்கை 1700 ஆகவும் அதிகரித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. அகராதிகள் தொடர்ந்தும் விரிவாக் கப்படவேண்டியவை என்ற புரிதலின் விளைவு இது எனலாம். சொற்களின் எண்ணிக்கை மட்டுமல்ல, சொற்பொருள் விளக்கத்தையும் விரிவாக்க வேண்டிய அவசியம் இங்கு காணப்படுகிறது. இதனைப் பேராசிரியர் சுசீந்திரராஜா அவர்கள் தனது "இலங்கை இந்திய வழக்குகளில் சொற்களின் பயன்பாடு" (2015) என்ற நூலில் விரிவாக ஆராய்ந் துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதி அனைவராலும் பாராட்டப்படும் ஓர் அகராதியாக விளங்கி வருகிறது. இது தற்கால மொழியியல், அகராதியியல் அறிவையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. இதனில் 21000 தலைச்சொற்கள் உண்டு. அவற்றுள் 1700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள் காணப்படுகின்றன. சொற்களுக்கான பொருளும் ஆங்கிலச் சொற்களும் உண்டு. அதனுடன் பயன்பாட்டை எடுத்துக்காட்டும் வாக்கியங்களையும் காணலாம். தமிழ் மொழி குறிப்பாகச் சொல் நிலையில் வேகமாக விரிவடைந்து மாறிக்கொண்டே வருகிறது. எனவே இவ்வகராதி "தற் காலத்துத் தமிழ் அகராதி" எனச் சிறப்படையும் பொருட்டு, காலத்திற்குக் காலம் விரிவாக்கமும், திருத்தமும் பெறுதல் வேண்டும். அதற்காக அகராதியை அவ்வவ் போது பல கோணங்களில் மீளாய்வு செய்யப்படுதல் இன்றியமையாததாகும்.

இலங்கையில் கிரியாவின் அகராதியைப் பயன்படுத்தும் போது சில பிரச்சினைகள் எழுகின்றன. வெகுவாகப் பயன்படுத்து கின்றவர்கள்தான் பிரச்சினைகளை எதிர் கொள்வர். பிறநாட்டவர்கள் இலங்கையின் தமிழ்ப்பகுதிகளுக்கு ஆய்வின் பொருட்டு வரும்போது, முதலில் தமிழ்மொழியைக் கற்கின்றனர். இன்று சிங்களவர்களிலும் பலர் தமிழ் கற்கின்றனர். அவர்கள் இலங்கையில் அன்றாடம் வழங்கும் பெருவழக்குடைய சொற்களைக் கண்டு கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அவர்கள் பெரும்பாலும் கிரியாவின் அகராதியையே பயன்படுத்துகின்றனர். அவர்கள் "அந்தச் சொல்லைக் காணோம்" , "ஏன் இந்தச் சொல்லுக்கு பொருள் இல்லையா?", "தமிழ் நாட்டு வழக்கில் இவை இல்லையா? எனப் பல கேள்விகளை எழுப்புகின்றனர். அவர்கள் கேட்கும் சொற் களையும், அவற்றின் பொருள்களையும் தமிழர்களாகிய நாம் அறிவோம். அதனால் நாம் அவற்றைப் பற்றி அலட்டிக் கொள் வதில்லை. நமக்கும் சொல், சொற்பொருள் பற்றிய பிரச்சினைகள் எழுவதுண்டு. அது வேறு நிலையில் வேறுவகையாக அமையும்.

மீண்டும் மீண்டும் ஒரே பொருள் பற்றிச் சிந்திக்கும் போது, மேலும் மேலும் புதிய சிந்தனைகள் தோன்றுகின்றன. அவ் வகையில் கிரியாவின் அகராதியைப் புரட்டப் புரட்ட புதிய சிந்தனைகள், பிரச்சினைகள் எழுகின்றன. பிரச்சினைகளை இனங்காண் பதற்குத் தமிழ் கற்கும் பிறநாட்டவர் உதவுகின்றனர். ஏனெனில் பிரச்சினைகள் பெரும்பாலும் அவர்களின் பாற்பட்டதே. எனவே இங்கு தற்கால வழக்குச் சொற்கள்

இயன்றளவுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட சொற்களில் சிலவற்றையே நான் இங்கு தந்துள்ளேன். முழுமையாக இவ்வாராய்ச்சியை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பினும், காலம் கருதி குறிப் பிட்ட சிலவற்றையே உதாரணமாக இங்கு கூறியுள்ளேன். இவை ஓரளவுக்கு பெரு வழக்குள்ள சொற்களே. சில நாட்களுக்கு முன்னர் செய்தித்தாள் ஒன்றில் "பணப் பாய்ச்சல்" என்ற சொல்லைப் படித்தமை ஓர் எடுத்துக்காட்டாகும். ஆங்கிலத்தில் இதனை "flow of money" என்ற தொடரின் அடிப்படை யிலேயே உருவானது. இத்தகைய சொற்கள் காலப்போக்கில் நிலைபேறடையுமா, ஊடாட்டத்திற்கு உட்படுமா, பெருவழக்குப் பெறுமா அல்லது வழக்கொழிந்து போகுமா என்பதெல்லாம் மக்கள் அதனை பயன் படுத்துவதைப் பொறுத்தது.

இலங்கையில் காணப்படும் மிகப்பழைய சொற்கள் அங்கு தொடர்ந்து இருப்பதற்கு காரணம், இலங்கைத் தமிழரின் தொன் மையும், இவர்களில் பிறநாடுகளுக்குச் சென்று வாழ்வதால் தம் வாழ்க்கை முறையில், பயன்பாட்டில் ஏற்படும் தனித்து வங்களைப் போற்றுவதும் ஆகும். உதார ணமாக, காவோலை, பனாட்டு போன்ற சொற்களை கிரியா இன்று இலங்கை வழக்குச்சொற்கள் என்று தந்துள்ளது. ஆனால் இவை முன்னர் தமிழ்நாட்டு அன்றாட வழக்கில் இருந்தவை. பண்டைய இலக்கியங்களிலும் காணப்பட்டவை. ஆனால் இன்று அவை வழக்கொழிந்து விட்டன. சில காலங்களில் அவர்களில் தமிழ்நாட்டுத் தொடர்பில் நெருக்கம் அற்றுப் போனவையாகவும் இருக்கலாம். அதுமட்டு மல்லாமல் இருவகை மொழிகளிலும் ஒலி, இலக்கண அமைப்பு, சொல், சொற் பொருள், அவற்றின் பயன்பாடு ஆகிய எல்லா நிலைகளிலும் வேறுபட்ட தனித் துவங்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தமையும் தெளிவாகின்றன.

மொழியில் சொற்கள் திரிபடைந்து வடிவம் மாறுவது இயல்பு. இத்திரிபு தமிழ்ச் சொற்களைப் பொறுத்தவரை தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் பல்வேறு வடிவத்தில் இடம்பெற்றுள்ளன. சிலசமயம் வடிவம் ஒன்றிற்கு மேற்பட்டதாகவும் அமைகிறது. பிறமொழிச் சொற்களைக் குறிப்பாக ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மயப்படுத்தி ஏற்றுக்கொள்வதிலும் இரு நாடுகளும் வேறுபடுகின்றன. பயன்பாட்டின் மூலம் சொற்களின் பொருள் மாற்றமும், பெருக்கமும் இரு நாடுகளிலும் வேறுபடு கின்றன. இரு நாட்டறிஞரும் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என நோக்குவதிலும், தகுதி கண்டு கொள்வதிலும், விலக்குவதிலும் வேறுபடுகின்றனர். இதற்கு கிரியாவின் அகராதி பேச்சு வழக்கு என்ற தலைச் சொல்லிற்குத் தரும் பொருளைக் கருதலாம்.

**இலங்கை/ யாழ்ப்பாண வழக்குச் சொற் களிலும் பொருளிலும் மாற்றங்கள்**

கிரியாவின் தமிழ் அகராதி, சென்னைத் தமிழ்ப் பேரகராதிகளில் உள்ள யாழ்ப்பாண வழக்குச் சொற்களிலும் பொருளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையையும், இத்தகைய மாற்றங்களில் சில சொற்களின் பொருள், முற்றிலும் வேறுபட்டும் சில திரிந்தும் சில சொற்கள் அகராதியில் குறிப் பிட்ட பொருளை விட மேலதிக பொரு ளையும் கொண்டு காணப்படுவதோடு சில சொற்கள் அருகி வழக்கொழிந்த சொற் களாகவும் காணப்படுகின்றன. இவற்றுக் கான சான்றுகள் பின்வருமாறு,

**அருகிச் செல்லும் சொற்கள்**

அகராதிகளில் காணப்பட்டு தற்காலத்தில் மிகவும் அரிதாகப் பயன்படுத்தப்படும் சொற்கள்.

தைலாப்பெட்டி, சோற்றுப் பெட்டி, தோம்பு, பால்மூட்டி, ஒத்தாப்பு, துலாக்கொடி, தீப்பள்ளம், அச்சிரக்கூடு (கிரியாவின் தமிழ் அகராதி)

**வழக்கில் இருந்த சொற்கள் மறைந்து அவற்றுக்கான பதிலீட்டுச் சொற்கள் பயன் படுத்தப்படல்**

அகராதியில் இருந்து பயன்பாட்டில் இருந்த சில சொற்கள் மறைந்து அவற்றிற்கு மாற்றீடாக சில சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன.

அச்சாரம் - முற்பணம் (கிரியாவின் தமிழ் அகராதி).

**மாற்றத்திற்கு உட்பட்டு வரும் சொற்கள்**

அகராதியில் காணப்பட்ட சொற்களில் சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்டு தற் காலத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

இடியாப்ப உரல் - இடியப்ப உரல்

( கிரியாவின் தமிழ் அகராதி பக்.130)

இதரை - இரதை (கிரியாவின் தமிழ் அகராதி பக்.137)

**வடிவமாற்றத்திற்கு உட்படல்**

அகராதிகளில் பெயராக அமைந்த சொற் கள் வினையாக அமைந்து பொருள் தருவது. அதேவேளை வினையாக அமைந்த சொற்கள் பெயராக அமைந்து பொருள் தரும் வகையில் சில சொற்களில் மாற்றங் கள் ஏற்பட்டுள்ளன.

மட்டை விழுதல் - சாவு (பெயர்) - சென்னைத் தமிழ் பேரகராதி.

தற்காலத்தில் யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் மரத்திலிருந்து மட்டை விழுதல் என்னும் வினைவடிவமாக பயன்பாட்டில் பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மறைந்த சொற்கள்**

அகராதிகளில் காணப்பட்ட பல சொற்கள் தற்காலத்தில் பயன்பாட்டில் இல்லாமல் வழக்கொழிந்த சொற்களாகக் காணப்படு கின்றன.

அவித்தியம் - அஞ்ஞானம் (கிரியாவின் தமிழ் அகராதி பக்.73).

**நிலைபேறு வழக்காதல்**

குறிப்பிட்ட சொல்லின் பொருளுக்கு மிக நெருக்கமான பொருள் தரக்கூடிய திறன் இருக்க வேண்டும். எவராலும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் நீண்டநாள் நிலைத்து நிற்கும் வழக்கும் அவற்றின் வழக்கொழிந்த நிலைக்குமான அடிப்படைக் காரணங்க ளைக் கண்டுகொள்ள முடியும்.

நடப்பு, சோம்பல்

**லெக்சிக்கனில் உண்டு; கிரியாவின் தமிழ் அகராதியில் இல்லை. லெக்சிக்கனில் உள்ள 612 சொற்களுள் சிலவற்றை இங்கு காணலாம்.**

**தொகுதி– I**

1. அங்கிடுதத்தி - நிலை கெட்டவன்
2. அந்தரித்தல் - தனித்திருத்தல் To be forlome, solitary, lonely உதவியற்றி ருத்தல்
3. அருக்குதல் - மனமின்மை காட்டுதல்
4. அவக்கவக்கெனல் - விரைவுக் குறிப்பு
5. அள்ளுகொள்ளை - பெருங்கொள்ளை
6. ஆனமட்டும் - கூடியவரை
7. இளிச்ச வாய்ப்பட்டம் - ஒன்றும் தெரியாதவன் என்ற பட்டம்
8. உணக்குதல் - உலர்த்துதல்
9. உவாதி - கடுந்துன்பம்
10. எடுபாடு - ஆடம்பரம்
11. எழுந்தமானம் - கண்டபடி
12. ஒரு போக்கு - மாறான நடை
13. ஒருமிக்க - ஒருசேர் (Together)

**தொகுதி– II**

14. கஞ்சித்தெளிவு - இறுத்த கஞ்சி water strained from rice after it has been well cooked, used as a light diet.
15. கலாதி - கலகம்
16. காதிலடிபடுதல் - அடிக்கடி செய்தி கேட்கப்படுதல்
17. குசால் - மனக்களிப்பு
18. குருட்டு வாக்கில் - தற்செயலாய்
19. குறுக்குக் கட்டு - மகளிர் நீராடும் போது மார்புக்கு மேலே கட்டுஞ் சீலைக் கட்டு.
20. கைமதியம் - காண்க கைமதிப்பு
21. கொளுவி விடுதல் - சண்டை மூட்டுதல்
22. கொன்னை - திக்கிப் பேசுதல்

**தொகுதி- III**

23. சக்கட்டை - மடையன் (black head)
24. சாலம் - நடிப்பு
25. சுணை கெட்டவன் - இலஞ்சை கெட்டவன் (Person of blunted sensibilities)
26. செலவு சிற்றாயம் - தினச் செலவுகளுக்கு வேண்டும் பணம்
27. சைவக் குருக்கள் - பார்ப்பனரல்லா தவருள் சிவதீஷை பெற்ற குருக்கள்
28. சோக்கு - ஆடம்பரம் (Pomp)
29. சோற்று மாடு - உபயோகமற்றவன்
30. தடிமாடன் - தடியன்
31. தரவழி - வகை (kind, sort, class, assortment)
32. தறுக்கணித்தல் - உணவுப் பொருள் இறுக்குதல்
(To grow hard, as vegetables in curry by defective cooking)
33. திருகுதாளி - புரட்டன் (cheat, trickish, person)

**தொகுதி– IV**

34. தூக்கிப்பிடித்தல் - நுணுகிக் குற்றங் காணுதல்
(To hunt out trivial faults)
35. தேரை மேய்தல் - தேங்காயின் உள்ளீடு கெடுதல்
36. தொத்துதல் - தொத்தியேறுதல்
37. நசியலன் - கழப்புணி (A person who practices evasion, who does not answer directly )
38. நாட்டு வளப்பம் - நாட்டு ஆசாரம்
39. நுள்ளான் - கடிக்குஞ் சிற்றெறும்பு
40. நொட்டைச் சொல் - குறைச்சொல் (Fault finding words)
41. நோஞ்சல் - மெலிவு Emaciation
42. பதுங்கலன - சங்கோசமுள்ளவன் (Bashful person)
பின் நிற்பவன் (Skulker)
43. பறட்டை - தூற்றுமயிர் (Tangled locks, shaggy, bushy hair)
44. பனங்கட்டிக் குட்டான் - பனஞ்சாறு காய்ச்சி ஊற்றும் ஓலைக்குட்டான் வகை

**தொகுதி– V**

45. பிழா தட்டுப்பிழா (Round wicker - basket)
46. புலுட்டை - செழிப்பற்றது (That which is withered, thin, lean)
47. புறணி - புறங் கூறுகை (Back- biting)
48. பேய்த்தனம் - மூர்க்க குணம்
49. பேரடிபடுதல் - எங்கும் பேசப்படுகை
50. பொன்னுரக்குதல் - சுபகாலத்தில் தாலி செய்யப் பொன்னை உருக்கி விடுதல்
51. மிண்டுதல் - செருக்கிப் பேசுதல் (To talk harshly or arrogantly)

**தொகுதி – VI**

52. முறுக்கிவிடுதல் - விரோதமுண்டாக்குதல் (To create ill-feeling between; to set one against another)
53. மூக்கறையன் - குறை மூக்குள்ளவன் (Man with a defective nose)
54. மூர்க்கை - பிடிவாத குணமுள்ளவன், அகங்காரி
55. மேலைக்கு - இனிமேல் (Hereafter, in future)
56. வக்கணம் - பட்டப்பெயர்
57. வயிற்றுப் பறப்பு - சீவன கஸ்டம்

58. வழக்குத் தொடுத்தல் - வழக்குத் தொடர்தல்
59. வாரப்பாடு - அன்பு

**தொகுதி – VII**

**குறை நிரப்புத் தொகுதி– (supplement)**

60. அங்கிடுதத்தி - அடிக்கடி நிலை பெயர் வோன் One who frequently changes his party, turn-coat
61. துடினம் - விரைவு
62. அணாப்பு - ஏமாற்றுகை
63. இழுவல் நழுவல் - நிச்சயமின்மை
64. கிழித்தல் - வைதல், To abuse
65. தண்ணீர்ப் பாடம்- நன்றாக மனப் பாடமானது

**இலங்கைத் தமிழில் காணப்படும் சிறப்புக் கூறுகள் : அகராதிச் சொற்களாயின – இலக்கண ரீதியானவை.**

பல காலங்களாக இலங்கைத் தமிழ்ச் சொற்கள் வழக்கிலிருந்து வருகின்றமை யால் அவற்றின் சில இயல்புகள் தனித் தன்மை கொண்டவையாக அமைகின்றன. இத்தனித்தன்மையானது இலங்கைத்தமிழ், இந்தியத்தமிழ் என்ற வேறுபாட்டை உருவாக்கவும் காரணமாயிற்று. இரண்டு நாட்டுத் தமிழ் மொழிகளும் காலப் போக்கில் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டன. நெருங்கிய தொடர்பற்ற நிலையில் இம்மாற்றங்களைப் பொறுத்த வரை ஒன்றை மற்றது தாக்கியதாகத் தெரியவில்லை. இரண்டிலும் பெரும்பாலும் தனித்தனிப் போக்குகளையே காண் கிறோம். இந்தியத்தமிழில் ஏற்பட்ட மாற்ற ங்கள், இலங்கைத் தமிழில் எழவில்லை. எனவே இலங்கைத் தமிழில் பழைய இலக்கண அமைப்புக்களையும், சொற் களையும் காண்கிறோம். இதனால் காலத் திற்குக் காலம் இலங்கைத் தமிழுக்குரிய மதிப்பும், மரியாதையும் பல்வேறு தளங் களில் பேசப்பட்டு வந்திருக்கின்றன.

இலங்கைத்தமிழ் மொழி, பிறமொழித் தொடர்பிலும், இந்தியத் தமிழிலிருந்து வேறாக நிற்கிறது. ஆனால் இலங்கை மொழிச் சூழலில் சிங்களமொழியைப் பொறுத்தவரை இந்நாட்டில் இரு மொழி களும் ஒன்றுக்கொன்று தேசியமொழிகளாக இருந்தாலும் கூட, இலங்கைத் தமிழ்மொழி, பிறமொழிகளாகிய டச்சு, போத்துக்கீசு, ஒல்லாந்து, ஆங்கிலம் போன்றவற்றி லிருந்து பல சொற்களைப் பெற்றுள்ளன. அவை இன்றும் வழக்கிலுண்டு. இதற்குக் காரணம் அதன் நிலைபேறாக்கமே. அவ் வகையில் மக்களின் அன்றாட பேச்சு வழக்கில் அவற்றின் பயன்பாடு (usage) அதிகமாகும். அதுமட்டுமல்லாமல் அச் சொற்கள் நிலைபேறடைவதற்கான மொழி யியல், மொழியியல்லாத காரணிகளிலும் இதற்கு அரண் சேர்க்கின்றன. இதற்கு உதாரணமாகப் பல சொற்களை இங்கு குறிப்பிடலாம்.

**பிறமொழிச் சொற்கள்–இலங்கைச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| 1. | கதிரை | நாற்காலி |
| 2. | லாம்பு | லாந்தர் |
| 3. | லாச்சி | drawyer |
| 4. | யன்னல் | யன்னல் |
| 5. | குண்டுசி | குண்டுசி, குண்டுப்பின் |
| 6. | குசினி | அடுப்படி |

குறிப்பாக இலக்கணக் கூறுகள் கூட அகராதிச் சொற்களில் பெருமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமைக்குத் தொல்காப்பியம், நன்னூல் போன்ற சங்ககால நூல்கள், அதன் பின்னர் தோன்றிய இலக்கண, இலக்கிய நூல்கள் பல சான்றாக அமைந் துள்ளன. அவ்வகையில் **சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள், ஏவல் வினைகள், ஏவலல்லாதவை “பி”, “வி” போன்ற வினையடிகளைக் கொண்டு சொற்களில் பெருமாற்றங்கள்** உருவாகியுள்ளன. உதாரணமாக,

**அம்மாவைக் கொண்டு அடிப்பி**
**அண்ணாவைக் கொண்டு படிப்பி**
**மாமாவைக் கொண்டு செய்வி**
**கடகத்தைக் கொண்டு அள்ளுவி**

இங்கு பி, வி போன்ற ஏவல் வினையடிகள், ஏவல் வினைகளைப் பிறப்பித்துள்ளன. இதனைப் பவணந்தி போன்ற இலக்கண ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டாலும், இவற்றை இந்தியத்தமிழில் தற்போது காணமுடியவில்லை. வினை எச்சங்களுடன் பண்ணு, வை, செய்.... போன்ற துணை வினைகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் இலங்கை வழக்கில் எழுதுவி, எழுதப்பண்ணு, எழுதவை, அடிப்பி, அடிக்கப்பண்ணு, அடிக்கச்செய், அடிக் கவை இப்படியான சொற்பிரயோகங்கள் இன்றும் நிலைத்திருக்கக் காரணம் அவற்றின் நிலைபேறாக்கமே.

இதே போன்று பல சொற்களை நாம் ஆராய வேண்டிய தேவை பெருகிக்கொண்டே போகின்றன.

**அல்ல – இல்லை,**
**வீடு அல்ல – வீடு இல்லை**

இவை எல்லாமே வெவ்வேறு பொருளில் வழங்கி வருவதைக் காணலாம். எனினும் அண்மைக்காலமாக இச்சொற்கள் ஓர்சில சந்தர்ப்பங்களில் "செய்தது பிழை அல்ல/ செய்தது பிழை இல்லை எனவும் இச்சந்தர் ப்ப வேறுபாடுகளை பொருட்படுத்தாத் தன்மையையும் காணலாம். இன்னும் ஒப்புமையைக் காட்டுவதற்கு, "இல்" என்ற உருபும், இதனில் அது நல்லது எனவும் தா, கொடு விட, பார்க்க போன்ற சொல்லுரு புகளும் அகராதிச் சொற்களில் தாக்கத் தைச் செலுத்துவதைக் காணலாம்.

மரியாதையின் நிமித்தம் நாம், நாங்கள் தாம், தாங்கள், தங்கள் போன்ற இடப் பெயர்கள் இன்னும் இலங்கைத்தமிழ் வழக்கில் நிலைத்து நிற்கின்றன. மேலும் தொல்காப்பியர் குறிப்பிட்ட "அம்" என்ற விகுதி இலங்கைப் பேச்சுத்தமிழின் வினைச் சொற்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள் ளமைக்கு பின்வரும் உதாரணங்கள் சான்றாகின்றன. படிப்பம் வருவம் எழுதுவம் நடப்பம் சொல்லுவென், செய்வென், விளையாடுவென் போன்ற பல.

எதிர்மறை வினையமைப்புக்களும் அகராதி உருவாக்கத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் காணலாம். உதார ணமாக:

நான் பாடென் (பாட மாட்டன்), நாங்கள் சொல்லம் (சொல்ல மாட்டம்), அவை சொல்லாயினம் (சொல்ல மாட்டினம்)

**கிரியாவின் அகராதிகளில் இலங்கைத் தமிழ், இந்தியத்தமிழ் சொற்கள்**

இலங்கைத் தமிழர் பயன்படுத்தும் சொற்களுக்குப் பதிலாக, தமிழ்நாட்டவர் பயன்படுத்தும் சொற்களை, இலங்கைத் தமிழர், குறிப்பாகக் கிராமத்து மக்கள், தம் அன்றாட வாழ்வில் எதற்கும் பயன்படுத்து வதேயில்லை எனலாம். பயன்படுத்து வதற்குத் தேவை ஏற்படுவதில்லை. ஆனால் இலங்கைத் தமிழருக்கு கடலை மிட்டாய், காசநோய், காப்பி, ஆஸ்துமா, பிட்டு போன்ற சில சொற்கள் பழக்கப்பட்டவை. இழைப்புளி, அரிசிநொய், சீதாப்பழம், சோழி, தட்டம்மை, பாச்சை போன்றவை பொருள் புரியாதவை. மறுபுறம், இலங்கைத் தமிழரின் சொற்களைத் தமிழ் நாட்டவர் புரிந்து கொள்வது பொதுவாகக் கடின மாகும்.

**முடிவுரை**

தற்காலச் சமுதாயத்தில் நாகரிக வளர்ச்சி மட்டுமன்றி தொழில்நுட்ப வளர்ச்சியும் உன்னத நிலையில் காணப்படுகின்றது.

சமூகத்தின் நடை, உடை, பாவனைகள் மாற்றமடைந்து செல்லும் போது பேச்சு மொழியில் குறிப்பாக சொல்நிலையில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். அதிகமான சொற்கள் சமுதாயத்தில் வழக்கொழிந்து செல்கின்றன. காலத்திற் கேற்ற புதிய சொற்கள் தோற்றம் பெறுகின்றன. சில சொற்கள் பொருளில் மாற்றமடைந்து செல்கின்றன. இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவதற்கு மொழியியல் காரணிகள், வரலாற்றுக் காரணிகள், அன்னியமொழிச் செல்வாக்கு, சமூகக் காரணிகள், வெகுசனத் தொடர்பு, சாதன வளர்ச்சி காரணங்களாக அமைகின்றன. இந்நிலையில் பேச்சுவழக்கில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மெதுவாக எழுத்துவழக்கு நிலைக்குச் சென்று சொற்களஞ்சியத்தையும் மாற்றி புதியதோர் பொருள் படைத்த புதிய அகராதிகளும் தோன்ற ஏதுவாகின்றன. இவை காலப்போக்கில் நிலைபேறாக்கம் பெற்ற சொற்களாயின. கிரியாவில் மேற்குறிப்பிட்ட சொற்கள் எவ்வாறு தவறவிடப்பட்டன என்பது ஆச்சரியப்படத்தக்கது. இவை யாவுமே ஊடாட்டத்திற்குரியவை. எனவே இவற்றில் பலவற்றை கிரியாவிற்குள் உட்சேர்ப்பது பொருத்தமானது.

அகராதிகள் படிப்பதற்கான நூல்களல்ல. அவை தேவையான நேரத்தில் மட்டும் பயன்படுத்தத் தகுந்தன. என்றாலும் அவற்றை நாம் அன்றாடம் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் சொற்தொகுதி பற்றிய அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். அத்துடன் அகராதிகளை மாணவ சமுதாயத்தின் பாடத்திட்டத்தில் புகுத்துவதன் மூலம் மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதில் சந்தேகமில்லை. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பல்வேறு துறைகளும் வளர்ச்சி கண்டுள்ள தற்காலத்தில் மொழி கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் அகராதிகள் பெரிதும் உதவுகின்றன.

## உசாத்துணைகள்


அண்ணாமலை, இ. (1993). மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு. எம். ஏ. நுஃமான் (பதி). *தொடர்பாடல்- மொழி நவீனத்துவம்.* கொழும்பு: இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.

அஸ்வினி, ஆ. (2013). *கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்களும் பொருளும் - விபரண ஆய்வு.* வெளியிடப்படாத ஆய்வேடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இராமசுந்தரம், கி. (1993). தமிழில் கலைச் சொல்லாக்கம். எம். ஏ. நுஃமான் (பதி). *தொடர்பாடல்- மொழி நவீனத்துவம்.* கொழும்பு: இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.

கஜேந்தினி. ஆ. (2004). *பேரகராதியில் உள்ள யாழ்ப்பாண வழக்குச் சொற்களும் பொருளும்* - தொகுதி - 05. வெளியிடப் படாத ஆய்வேடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

சுசீந்திரராசா, சு. (2009). *தமிழியல்சார் சிந்தனைத் துளிகள் (தொகுதி I).* கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

------------------ (2011). *தமிழியல்சார் சிந்தனைத் துளிகள் (தொகுதி II).* கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

சுபதினி, ர. (1998). பேரகராதியும் இலங்கைத் தமிழ்ச் சொற்களும், *Proceeding of All Indian Scientific Tamil Society (Seventh Seminar)* Thanjavur: Tamil University.

------------- (2005). *இலங்கைத் தமிழ்ச் சிறப்புச் சொற்கள்.* Colombo: Paranan: associates & printers.

குமரேசன், விருபா. (2017). கையகராதிப் பதிப்பு வேறுபாடுகள். *நெய்தல் ஆய்வு*, 2(1): 64-71.

*கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,* (இரண்டாம் பதிப்பு), 2008.

சித்திராதேவி, க. (2004). *பேரகராதியில் உள்ள யாழ்ப்பாண வழக்குச் சொற்களும் பொருளும்,* வெளியிடப்படாத ஆய்வேடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிவதர்சினி, சி. (2004). *தமிழ்ப்பேரகரா தியில் யாழ்ப்பாண வழக்குச் சொற்களும் பொருளும், தொகுதி 01.* வெளியிடப்படாத ஆய்வேடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிவாஜினி, வி. (2004). *தமிழ்ப் பேரகரா தியில் யாழ்ப்பாண வழக்குச் சொற்களும் பொருளும்.* வெளியிடப்படாத ஆய்வேடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஜீவலோஜினி, வே. (2004). *பேரகராதியில் யாழ்ப்பாண வழக்குச் சொற்களும் பொருளும், தொகுதி **03**.* வெளியிடப் படாத ஆய்வேடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

Meenakshisundaram, T. P. (1965). *History of Tamil Language.* Poone: Deccan College.

Shanmugam, S, V. (1983). Aspects of Language Development in Tamil. Annamalai Nagar: Indian Linguistics Association.

*Tamil Lexicon Volume – 1-6.* (1982). Madras: University of Madras.